2010 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி அது இல்லையே! நீங்கள் side track–ல் போவதையெல்லாம் வைத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் கேட்கும் கேள்வி வேறு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்திற்கென இவ்வரசு ரூ.143 கோடியே, 64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது, இதில் மாநில அரசு பங்காக ரூபாய் 77 கோடியே, 87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மூலமாக கிட்டத்தட்ட ரூபாய் 65 கோடியே, 77 இலட்சம் வழங்கப்பட்டிருக்கின்றது. தனியாக 108 அவசர ஊர்திக்கென்று அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். பல திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில், இந்த நிதியையும் சேர்த்து, மத்திய மாநில பங்களிப்பில், தமிழக அரசால் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது திட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தொழில் மையம்

***103075—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் மாவட்டத் தொழில் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 நவம்பர் 9

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை மறு சீரமைப்பு செய்து, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய திருப்பூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. அரசு ஆணை எண் 4, நாள் 4–2–2010 மூலம் புதிய திருப்பூர் மாவட்டத்திற்குரிய மாவட்டத் தொழில் மையம் அமைக்க ஆணை வழங்கப்பட்டு, இம்மாவட்டத் தொழில் மையம் 17–4–2010 முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்புகிறபோது அங்கு மாவட்டத் தொழில் மையம் இல்லை. இந்தக் கேள்வி சபைக்கு வருவதற்கு முன்னாலே கலைஞர் அரசு அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் கேள்வியோடு ஒரு செய்தியையும் இந்த அவைக்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். திருப்பூரில் செயல்பட்டு வருகிற சாய ஆலைச் சிறு தொழில்கள் நிறைந்த அந்த நகரத்தில், சாயத் தொழில் முற்றிலும் நிறுத்தப்படுகிற ஒரு ஆபத்து உருவானபோது, மத்திய, மாநில அரசுகளின்மூலம் அதற்கு நிதியுதவி கிடைக்கவில்லையென்றால், மானியம் கிடைக்கவில்லையென்றால், ஒட்டுமொத்த திருப்பூருடைய பின்னலாடைத் தொழில் பாதிக்கும் என்ற செய்தியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதல்வரின் கவனத்திற்கும் எடுத்துச் சென்று, மானிய உதவி வேண்டுமென்று நேரிலும், இந்த அவையிலும் நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருந்தேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரு முயற்சி எடுத்து மத்திய அரசோடு பேசி, நம்முடைய மாண்புமிகு துணை முதல்வரை டெல்லிக்கு அனுப்பி, மத்திய அரசோடும், குறிப்பாக நம்முடைய பாரதப் பிரதம அமைச்சரோடும், நிதி அமைச்சர் அவர்களோடெல்லாம் பேசி இப்போது மத்திய அரசின் ரூபாய் 200 கோடி மானியத்தையும், மாநில அரசின் ரூபாய் 120 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்து, கடந்த அக்டோபர் 17 ஆம் தேதி அன்று நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் திருப்பூருக்கு நேரில் வந்து அந்தத் தொகைக்கான முதல் தவணை காசோலையை

2010 நவம்பர் 9]

பல்லாயிரக்கணக்கான தொழில் உடைமையாளர்கள், தொழிலாளர்கள் நிறைந்த அந்த விழாவிலே வழங்கி திருப்பூரினுடைய தொழில் நலனையும், தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வையும் பாதுகாத்தமைக்காக திருப்பூர் மக்கள் அனைவரின் சார்பாக இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக கட்டி முடிக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இப்போதுதான் முதன்முறையாக இந்த மானிய உதவியை மத்திய அரசும், மாநில அரசும் வழங்கியிருக்கின்றன. அதற்காக இரு அரசுகளுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

நம்முடைய மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் நான் எழுப்பிய பிரதான கேள்விக்குப் பதிலாக அது செயல்படுத்தப்பட்டுவிட்ட விவரத்தைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய துறை சார்பாக ஏற்கெனவே இந்த அவையிலே திருப்பூர் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கிற தொழிற்பேட்டைகளை தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவருடைய சொந்த ஊரான பொங்கலூரிலே ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும் அது இதுவரையில் தொடங்கப்படாமலேயே இருக்கிறது. ஒருவேளை அவர் ஊர் என்பதால், மற்றவர்கள் ஏதாவது சந்தேகப்படுவார்கள் என்பதால் விட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. ஆகவே, அந்த பொங்கலூர் தொழிற்பேட்டையை விரைவிலே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கேட்டுக்கொண்ட தொழிற்பேட்டை கண்டியங்கோவில் கிராமத்திலும், தெற்கு அவினாசிப்பாளையம் கிராமத்திலும், ஆக ஒட்டுமொத்தமாக 258.09 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி தொழிற்பேட்டையை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பாசனம் இல்லாத புஞ்சை பகுதிகளிலே அந்த நிலத்தை எடுப்பதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. விரைவிலே அந்தத் தொழிற்பேட்டை அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட கால வரம்பு தீர்மானிக்கப்பட்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுமா? ஏனென்றால், தேர்தலுக்கு முன்னால் குறைந்தபட்சம் அதற்கான தொடக்கப் பணிகள் நடந்தால் உதவியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கால வரம்பைத் தீர்மானித்து அந்தப் பணியைத் துவக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தொழிற்பேட்டை தொடங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

நெல் கொள்முதல் நிலையம்

***91277—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—